01.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நெல், கோதுமைக்கு நாடு முழுவதும் ஒரே வரியா? மத்திய அரசு விளக்கம்**

நெல்லுக்கும், கோதுமைக்கும் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக வரி விதிக்கும் திட்டத்துக்கு மாநில அரசுகள் ஒப்புக் கொள்ளவில்லை என்று மத்திய உணவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய உணவுக் கழகத்தை புனரமைப்பது குறித்து அமைக்கப்பட்ட சாந்த குமார் தலைமையிலான குழு, நெல்லுக்கும், கோதுமைக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கான வரியோடு சேர்த்து மாநிலங்கள் விதிக்கும் மொத்த வரி விகிதத்தை சீராக மாற்றும் வகையில் 3 சதவீதமாக நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரைத்தது.

"சாந்த குமார் குழுவின் பரிந்துரை குறித்து மாநில அரசுகளிடம் மத்திய உணவு அமைச்சகத்தின் சார்பில் ஆலோசனை நடத்தப்பட்டது; ஆனால், மாநிலங்கள் ஒப்புக் கொள்ளாததால் அந்தப் பரிந்துரையை செயல்படுத்த வாய்ப்பில்லை' என்று உணவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நடைமுறையின்படி, நெல்லுக்கும், கோதுமைக்கும் விதிக்கப்படும் வரி மாநிலங்கள் வாரியாக வேறுபடுகிறது.

கோதுமைக்கு அதிகபட்சமாக பஞ்சாப் மாநிலத்தில் 14.5 சதவீத வரியும், ஹரியாணா மாநிலத்தில் 11.5 சதவீத வரியும் வசூலிக்கப்படுகிறது.

இதேபோல், நெல்லுக்கான நுகர்வு வரி பஞ்சாப் மாநிலத்தில் 14.5 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக ஆந்திரத்தில் 12.5 சதவீதம் விதிக்கப்படுகிறது.

**உள் மாவட்டங்களில் பெருங்காற்று, இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் உள் மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் பெருங்காற்று, இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், மதுரை விமான நிலையம், திண்டுக்கல் ஆகிய இரு இடங்களில் தலா 20 மி.மீட்டர் மழை பதிவானது. வெப்ப சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறிப்பாக, உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பெருங்காற்று வீசக்கூடும். மேலும், இடியுடன் கூடிய மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 99, 84 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும்.

சென்னையில் 102 டிகிரி: தமிழகத்திலேயே ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக சென்னையில் 102 டிகிரி வெயில் பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, மதுரையில் 100-ம், திருச்சியில் 101-ம், பாளையங்கோட்டை, தொண்டியில் 99-ம், நுங்கம்பாக்கத்தில் 98 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கும் வெயில் பதிவானது.

**விவசாயிகளுக்கு சாதக அம்சங்களுடன் நிலம் கையகச் சட்டம் இருக்கும்**

விவசாயிகளுக்கு சாதக அம்சங்களுடன் நிலம் கையகப்படுத்துதல் சட்டம் இருக்கும் என பாரதிய கிசான் சங்க அகில இந்திய அமைப்புச் செயலர் தினேஷ்குல்கர்னி கூறினார். மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அச்சங்கத்தின் 9 மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் பேசியது: விவசாயிகளின் பிரச்னைகளை நேரடியாக அறியும் வகையில் தற்போது அனைத்துப் பகுதிகளிலும் பயணம் செய்துவருகிறேன்.

விவசாயிகள் அளிக்கும் கோரிக்கைகளை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வேன். நிலம் கையகப்படுத்துதல் சட்டம் விவசாயிகளுக்கு சாதகமான அம்சங்களுடனேயே இருக்கும். நதிகள் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் விவசாயிகளின் தேவைகள் பூர்த்தியாகும். விவசாயத்தை லாபகரமானதாக்கினாலே நாடு வளம் பெறும். அதற்கான நடவடிக்கையை பாஜக மத்திய அரசு மேற்கொண்டுவருகிறது.

விவசாயிகளின் பிரச்னைகளை மத்திய அரசின் கவனத்துக்கு எடுத்துச்சென்று தீர்வுகாண முயற்சித்து வருகிறோம் என்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்: நதி நீர் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்தவேண்டும். விவசாயத்துக்கென தனி நிதிநிலை அறிக்கை வேண்டும். விவசாயிகளின் பயிர் இழப்பிற்கு காப்பீடு உறுதி செய்யும் வகையில் புதிய காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். மத்திய அரசு விதைப்பண்ணைகள் மூலம் தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுடன் 50 சதவிகிதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்யவேண்டும். பசு வதையைத் தேசிய அளவில் தடை செய்து தேசிய விலங்காக பசுவை அறிவிக்கவேண்டும். ராணுவம், ரயில்வே, சாலைகள் அமைத்தல், பாசனத் திட்டங்கள், மருத்துவமனைகள், மின்சார வழித்தடங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான நிலம் கையகப்படுத்துதலுக்கு பாரதிய கிசான் சங்கம் முழுமையாக ஆதரவளிக்கிறது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், சங்கத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர் டி.பெருமாள், மாநிலச் செயலாளர் என்.எஸ்.பார்த்தசாரதி மற்றும் 9 மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

**வத்தல் வரத்து குறைவால் விலை அதிகரித்தது**

வரத்து குறைவு போன்ற காரணத்தால் விருதுநகர் மார்க்கெட்டில் வத்தல் குவிண்டாலுக்கு விலை ரூ.200 வரையில் அதிகரித்துள்ளது. அதைத் தொடர்ந்து மல்லி விலையும் உயர்ந்துள்ளது.

ஆந்திராவில் வத்தல் மார்க்கெட்டுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதால், விருதுநகர் மார்க்கெட்டுக்கு வத்தல் வரத்துக் குறைந்துள்ளது. இதனால், கடந்த வாரத்தை விட ரூ.200 முதல் ரூ.250 வரையில் விலை அதிகரித்துள்ளது. இதேபோல், மல்லி வரத்தும் குறைந்துள்ளதால் குவிண்டாலுக்கு ரூ.200 வரையில் விலை உயர்ந்துள்ளது.

இதைத் தொடர்ந்து துவரம் பருப்பு வகைகள், உருட்டு உளுந்தம் பருப்பு வகைகள், பாசிப்பருப்பு ஆகியவை கடந்த வாரம் நிலவிய விலையே இருந்து வருகிறது.

**கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க இளைஞர் அணி துவக்கம்**

அன்னூரில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் இளைஞர் அணி துவக்க விழா, திருவண்ணாமலையில் ஜூலை 5-ஆம் தேதி நடைபெறும் உழவர் தின மாநாடு ஆகியவை குறித்த விளக்கக் கூட்டம் அன்னூரில் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, காரேகவுண்டன்பாளையம் நடராஜ் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநிலப் பொருளாளர் என்.கே.டி.பொன்னுசாமி, மாநகர் மாவட்டத் தலைவர் டாக்டர் சி.தங்கராஜ், ஏ.கே.சண்முகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி சங்கக் கொடியை ஏற்றி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். கொள்கை பரப்புச் செயலாளர் கே.ஏ.சுப்பிரமணியம் இளைஞர் அணி நிர்வாகிகளை அறிமுகப்படுத்தினார். இளைஞர் அணிச் செயலாளர் அத்தப்பகவுண்டன்புதூர் பாபு இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு பச்சைத்

துண்டு அணிவித்து வரவேற்றார். இதில், திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**நெசவாளர்களுக்கு 506 பசுமை வீடுகள்**

திருப்பூர் அருகே வள்ளிபுரம் ஊராட்சியில் நெசவாளர்களுக்கு 506 பசுமை வீடுகள் கட்டும் பணிகளை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் சனிக்கிழமை ஆய்வு செய்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில், திருப்பூர் அருகே வள்ளிபுரம் ஊராட்சியில் தட்டான்குட்டை அருகே நெசவாளர் பசுமை நகர் பகுதியில் ரூ. 9.80 கோடி மதிப்பில் 376 பசுமை வீடுகள் கட்டும் பணிகளும், அப்துல் கலாம் நகர் அருகில் ரூ. 3.38 கோடி மதிப்பில் 130 பசுமை வீடுகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் கு.கோவிந்தராஜ் செய்தியாளர்களிடம் கூறியது:

நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் திட்டத்தை சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்து, தமிழகம் முழுவதும் 10,000 பசுமை வீடுகள் கட்டுவதற்கு முதல்வர் உத்தரவிட்டிருந்தார். நெசவாளர்களுக்கான பசுமை வீடுகளுக்கு தலா ரூ. 2.60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் 2013-14-ஆம் ஆண்டில் 538 வீடுகளும், 2014-15-ஆம் ஆண்டில் 273 வீடுகளும் என மொத்தம் 811 பசுமை வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் 375 சதுர அடி பரப்பில் சூரிய சக்தி மின் விளக்கு வசதியுடன் ரூ.2.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.

வள்ளிபுரம் பசுமை நகர்-1 பகுதியில் 376 வீடுகளும், பகுதி -2-இல் 130 வீடுகளும் என மொத்தம் 506 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகளை விரைந்து நிறைவேற்ற, உதவிப் பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 12 ஏக்கர் பரப்பளவில் 376 வீடுகள் கட்டப்பட்டு 12 கூட்டுறவு சங்க

உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. மேலும், இப்பகுதியில் மாவட்ட ஆட்சியரின் தன் விருப்ப நிதியிலிருந்து தெருவிளக்குகள், மக்களவை உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, தாய் திட்டம் மூலமாக சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள், குடிநீர்த் தொட்டிகள் அமைத்துத் தரப்படும். மேலும், இப்பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்கப்படவுள்ளது. பசுமை வீடுகள் கட்டுமானப் பணிகளை ஜுன் மாதத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். இதில், ஊரக வளர்ச்சி முகமை கூடு தல் இயக்குநர் ராஜாமணி, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ரூபன் சங்கர்ராஜ், உதவி திட்ட அலுவலர் சேகர், உதவி செயற்பொறியாளர் கோவிந்தராஜ், திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், பால்ராஜ், நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஜெகநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**காட்டேரிப் பூங்காவில் சிறப்புக் கண்காட்சி**

குன்னூர் அருகே உள்ள காட்டேரிப் பூங்காவில் சிறப்புக் கண்காட்சி நடந்த திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குன்னூரில் சிம்ஸ்பூங்கா, இயற்கை காட்சி முனைகளான லேம்ஸ்ராக், டால்பிநோஸ் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்கள் உள்ளன. கடந்த 2011-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காட்டேரிப் பூங்கா தற்போது நீலகிரி மாவட்ட சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. குன்னூர் - மேட்டுப்பாளையம் இடையே அமைக்கப்பட்டுள்ள இப்பூங்காவில் பல்வேறு வகையான மலர்ச்செடிகள், புல்வெளி, சிறுவர் விளையாட்டு கருவிகள் உள்ளன. ஆண்டுதோறும் கோடை விழாவின் இறுதி நிகழ்ச்சியான பழக்கண்காட்சியை தோட்டக்கலை துறையினர் சிம்ஸ்பூங்காவில் நடத்தி வருகின்றனர். அதேபோல, காட்டேரிப் பூங்காவில் சிறப்புக் கண்காட்சி நடத்தப்பட்டால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிக்கும் என சுற்றுலா ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதுகுறித்து, மாவட்ட தோட்டக்கலைத் துறை

இணை இயக்குநர் மணி கூறுகையில்,  காட்டேரிப் பூங்காவை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு, கோடை விழா காலங்களில் பழங்குடியின மக்களின் கைவினைப் பொருள் கண்காட்சி நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறினார்.

**ஏலகிரியில் 100 ஏக்கரில் பூங்கா: ஆட்சியர் தகவல்**

ஏலகிரியில் அரசு சார்பில் இரண்டு நாள்கள் நடைபெற்ற கோலாகல கோடை விழா ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. இதில் ஆட்சியர் பேசுகையில், ஏலகிரியில் நூறு ஏக்கர் பரப்பளவில் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கோடை விழாவையொட்டி, பல்வேறு போட்டிகள் இரண்டு நாள்களும் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு நிறைவு விழாவில் பரிசுகளை வழங்கி வேலூர் மாவட்ட ஆட்சியர் இரா. நந்தகோபால் பேசியது:

பல்வேறு பணிச் சுமைகளால் மனஅழுத்தத்துக்கு ஆளானவர்கள் இதுபோன்ற சுற்றுலாத் தலங்களுக்கு செல்வதால் மனதளவிலும், உடல் அளவிலும் புத்துணர்ச்சி பெறமுடியும். மாநிலத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் மேம்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஊட்டிக்கு அடுத்தபடியாக ஏலகிரி மலையில் கோடை விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. ஏலகிரி மலையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அனைத்துப் பகுதிகளிலும் சாலைகள் விரிவுப்படுத்தப்படும், பயணிகள் விடுதி, நூறு ஏக்கர் பரப்பளவில் பூங்கா அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றார். விழாவில் திருப்பத்தூர் எம்எல்ஏ ரமேஷ், ஜோலார்பேட்டை ஒன்றியக் குழுத் தலைவர் ரமேஷ், மாவட்ட ஊராட்சிக்

குழுத் தலைவர் லீலா, சார்-ஆட்சியர் ரங்கராஜன், வட்டாட்சியர் ராஜசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ்பாபு, முரளிதரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக காலை முதல் பள்ளி மாணவர்களின் பல்சுவை நாட்டிய நிகழ்ச்சிகள், பாரதி கலைக்கூடம் நடத்திய நகைச்சுவை நாடகம் நடைபெற்றன. தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் சார்பில் கரகாட்டம், காவடி, பொய்க்கால்குதிரை, சிலம்பாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை 3 மணியளவில் நடைபெற்ற நாய்கள் கண்காட்சிக்கு பெரிய, நடுத்தர, சிறிய வகை நாய்களை போட்டியாளர்கள் அழைத்து வந்திருந்தனர். அதில் உரிமையாளர்கள் இட்ட கட்டளைக்கு ஏற்ப நாய்கள் செய்து காண்பித்த சாகசங்களை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். மாலையில் கோடை விழா சார்பில் நடைபெற்ற படகுபோட்டி, வாலி பால், கபடி, கயிறு இழுத்தல் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் அமைக்கப்பட்ட அரங்குகளில் வேளாண்மைத் துறை அரங்குக்கு முதல் பரிசும், பள்ளிக் கல்வித் துறைக்கு 2-ஆம் பரிசும், கால்நடை துறைக்கு 3 ஆம் பரிசும் அளிக்கப்பட்டன.

**வேளாண் உற்பத்தியாளர் சங்கத்தில் ரூ.1.40 கோடிக்கு மஞ்சள் ஏலம்**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், மஞ்சள் ரூ.1.40 கோடிக்கு ஏலம் போனது.

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு, ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்தி வேலூர், நாமக்கல்,

மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து மஞ்சள் ஏலத்துக்கு வந்தது.

மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய இடங்களிலிருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலத்துக்கு மொத்தம் 2,500 மஞ்சள் மூட்டைகள் கொண்டுவரப்பட்டன. இதில், விரலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.6,309 முதல் ரூ.8,299 வரையிலும், கிழங்கு ரகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.5,555 முதல் ரூ.7,269 வரையிலும் ஏலம் போனது. பனங்காளி ரகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.4,319 முதல் ரூ.1,849 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.1.40 கோடிக்கு ஏலம் போனது.

பிற மார்க்கெட்டை விட, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.250 அதிக விலை கிடைத்தது.

**இதுவரை 1 லட்சம் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கச் சிகிச்சை**

கரூர் மாவட்டத்தில் இதுவரை 1.05 லட்சம் விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா தெரிவித்தார். கரூர் ஊராட்சி ஒன்றியம், சோமூர் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற விலையில்லா திட்ட ஆடுகளுக்கான குடற்புழு நீக்கம்

மற்றும் மருத்துவப் பரிசோதனை முகாமைப் பார்வையிட்டு மேலும் அவர் கூறியது:

தமிழக முதல்வரால் 15.9.2011-ல் தொடங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறிகள் வழங்கும் திட்டத்தில் கரூர் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு

கீழுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, கரூர் மாவட்டத்தில் 2011-12-ல் 1,842 பயனாளிகளுக்கு 7,368 ஆடுகளும், 2012-13-ல் 3,003 பேருக்கு 12,012 ஆடுகளும், 2013-14-ல் 2,391 பேருக்கு

9,564 ஆடுகளும், 2014-15-ல் 2,437 பயனாளிகளுக்கு 9,748 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும்,

எடையை அதிகரிக்கவும் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலைய பகுதியில் 29-ம் தேதி மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது. முகாம்களில் இதுவரை வழங்கப்பட்ட 38,692 ஆடுகள் மற்றும் அவற்றில் இருந்து பெறப்பட்ட 67,012 குட்டிகளுக்கு என

மொத்தம் 1,05,704 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் என்றார். முகாமில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராமநாதன், துணை இயக்குநர் பழனிவேல், உதவி இயக்குனர்கள் மாதேஸ்வரன், குழந்தைசாமி, சோமூர்

ஊராட்சித் தலைவர் கலாவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"விதிகளைப் பின்பற்றாமல் விதை விற்றால் நடவடிக்கை'**

சட்ட விதிகளை பிற்பற்றாமல் விதை விற்றால் விற்பனையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் ஆர்.எஸ். மனோகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது: விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடமே விவசாயிகள் விதைகளை வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும்போது விதைகள் தரமாக உள்ளதா சான்று அட்டை பொருத்தப்பட்டுள்ளதா என்ன பயிர் என்ன ரகம், குவியல் எண், காலாவதி நாள், உற்பத்தியாளர் முகவரி உள்ளதா போன்றவற்றை கவனிக்க வேண்டும். பின்னர், விதை வாங்கும்போது கண்டிப்பாக ரசீது பெற வேண்டும். விதை விற்பனை உரிமம் இல்லாத, ரசீது வழங்காத விதை விற்பனையாளர்கள் பற்றி தஞ்சாவூர் விதை ஆய்வாளர் அ. சிவக்குமாரை 9842602975 என்ற எண்ணிலும், கும்பகோணம் விதை

ஆய்வாளர் அ. முகமது பாரூகை 9443092411 என்ற எண்ணிலும், விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தை 04362-267959 என்ற எண்ணிலும் ஆதாரங்களுடன் புகார் செய்யலாம். விதை விற்பனை செய்பவர்கள் விதை விற்பனை உரிமம் பெற்ற பிறகு விநியோகம் செய்யலாம். கொள்முதல் பட்டியலை முறையாகப் பராமரிக்க வேண்டும். விதை இருப்பு, விலையை விவரப் பட்டியல் பலகையில் நாள்தோறும் எழுதி வைக்க வேண்டும். விதைகளைக் கொள்முதல் செய்யும்போது குவியல் எண், காலாவதி நாளை சரிபார்த்து இருப்பு வைக்க வேண்டும். உரிமம் இல்லாமல் தானியமாகக் கொள்முதல் செய்து தரமற்ற பொருளை விதை எனக் கூறி விற்பனை செய்பவர்கள் மீது அத்தியாவசிய பொருள்கள் சட்டம் 1955-ன் படி நீதிமன்ற வழக்குத் தொடுத்து 6 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை பெற்றுத் தரப்படும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பீட்ரூட் விலை உயர்வு**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் காய்கறிகள் அதிகமாக பயிரிடப்படுகிறது. சில இடங்களில் பீட்ரூட் விளைவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக பெய்த கோடை மழையால் பீட்ரூட் செடிகள் நீரில் நனைந்து அழுகிவிட்டன. மகசூல் பாதித்ததால் மார்க்கெட்டில் வரத்து குறைந்துவிட்டது. ஒரு கிலோ பீட்ரூட்டின் விலை ரூ.3.50 ஆக இருந்தது. மே மாத துவக்கத்திலும் இதே விலை தான் நீடித்தது. கொள்முதலுக்கு

தேவையான அளவிற்கு பீட்ரூட் கிடைக்கவில்லை. மே 10ல் இதன் விலை ரூ.5ஆகவும் மே 15ல் ரூ.9 ஆகவும் இருந்தது. நேற்று கிலோ ரூ.12 க்கு விற்றது.

## ஜவுளித்துறையில் திறன் மேம்பாடு புத்துயிர்! மில் தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்



கோவை : மில் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த சிறப்பு பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் திட்டத்தால், ஜவுளித் துறை புத்துயிர் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தேசிய அளவில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக அதிக மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் துறையாக ஜவுளித்துறை விளங்குகிறது. தமிழகத்தில், 1,200க்கும் மேற்பட்ட மில்கள் உள்ளன; நேரடியாகவும், மறைமுகமாகவும் பல லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.தொழிலாளர்களிடம் திறன் பற்றாக்குறை அதிகம் உள்ள காரணத்தால் உற்பத்தி பாதிக்கப்படுவது, பல ஆண்டுகளாக தொடர்கிறது. சில மில் நிர்வாகங்கள், தாமாக முன்வந்து தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றன. எனினும், ஒவ்வொரு ஆலையிலும் ஒவ்வொரு விதமான திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படுவதால், தொழிலாளர்களின் திறன் வேறுபடுகிறது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண, மத்திய அரசு சிறப்பு திட்டத்தை அறிவிக்க வேண்டும் என, மில் நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.
ஜவுளித்துறை வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஸ்பின்னிங், வீவிங், நிட்டிங், புராசசிங் உள்ளிட்ட நான்கு பிரிவுகளில், திறன் மேம்பாடு திட்டத்தை செயல்படுத்துவது குறித்து சிறப்பு திட்டத்தை மத்திய அரசு கடந்த பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிட்டது.இத்திட்டத்தை நடைமுறைபடுத்தும் முயற்சியில், தற்போது மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.
தமிழகத்திலுள்ள ஸ்பின்னிங் மில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிக்க, 117 மில்கள் பயிற்சி மையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
தேசிய திறன் மேம்பாடு கவுன்சில் தலைமையில் நடைமுறைபடுத்தப்பட உள்ள இத்திட்டத்தில், முதல் கட்டமாக, பயிற்சியாளர்களுக்கு கோவை, அவிநாசி ரோட்டிலுள்ள தென்னிந்திய டெக்ஸ்டைல் ஆராய்ச்சி மையத்தில் (சிட்ரா) பிரத்யேக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.இதுவரை இரண்டு குழுக்களை சேர்ந்த, 50 பயிற்சியாளர்களுக்கு பிரத்யேக பயிற்சி நிறைவு பெற்றுள்ளது. மொத்தம், 300 பயிற்சியாளர்களுக்கு சிட்ரா வளாகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
அதன் பின், இவர்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட, 117 பயிற்சி மையங்களில், புதிதாக பணிக்கு சேர்ந்துள்ள, 7,749 தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கும் பணியில் ஈடுபடுவர்.

மூன்று மாதங்களுக்குள் இப்பயிற்சி யை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி முடிந்தவுடன் அடுத்தகட்டமாக தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணி துவங்கும். மத்திய அரசின் இந்த முயற்சி ஜவுளித் துறையினர் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது.
கோவை, டெக்ஸ்பிரனர்ஸ் அமைப்பின் செயலாளர் பிரபு தாமோதரன் கூறுகையில், "தொழிலாளர்களின் இத்திட்டத்தால் நாடு முழுவதும்

மில்களில் பணியாற்றும் ஊழியர்களின் செயல்திறன் சீராக இருக்க வாய்ப்பு ஏற்படும். தொலைநோக்கு பார்வையுடன் இத்திட்டத்தை மத்திய அரசு வகுத்துள்ளது," என்றார். ஆயத்த ஆடை விற்பனை ஆண்டு தோறும் கணிசமாக அதிகரிக்கும் என, கணக்கிடப்பட்டுள்ள நிலையில், தொழிலாளர் திறன் மேம்படுத்தும் திட்டம், ஜவுளித் துறை வளர்ச்சிக்கு உதவும் என்பதில் சந்தேகமில்லை.

**சிறு தானிய உற்பத்தி பயிற்சி**

வாலாஜாபாத்: காட்டாங்கொளத்துார் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில், ஜூன் 16 மற்றும் 17ம் ஆகிய தேதிகளில், விவசாயிகளுக்கான சிறு தானிய உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, வேளாண் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் பத்மாவதி கூறியதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, சிறு தானியங்கள் உற்பத்தி செய்வது குறித்து தொழில்நுட்ப பயிற்சி, பொத்தேரி காட்டுப்பாக்கம் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில், ஜூன் 16 மற்றும் 17ம் ஆகிய தேதிகளில் அளிக்கப்பட்ட உள்ளது. இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள், இம்மாதம், 10ம் தேதிக்குள், மாவட்ட வேளாண் உழவர் பயிற்சி நிலைய அதிகாரிகளிடம் நேரிலோ அல்லது 99529 16247 என்ற அலைபேசியிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**நீர்நிலைகளில் மீன் வளர்க்க அழைப்பு**

திருவள்ளூர்: பொது நீர்நிலைகளில் ஐந்து ஆண்டு குத்தகைக்கு எடுத்து மீன் வளர்க்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, ஏரி, குளம், மற்றும் குட்டைகளை குத்தகைக்கு எடுத்து மீன் வளர்ப்பு மேற்கொள்ள விரும்புவோர்

முகமையில் உரிய பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று, தங்களை உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டும். பொது நீர்நிலைகளை, ஐந்து ஆண்டு குத்தகைக்கு எடுத்து, மீன் வளர்க்க விரும்புவோர் திருவள்ளூர் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையை அணுகி பயன் பெறலாம். மீன் மற்றும் இறால் வளர்ப்பு குறித்து உரிய ஆலோசனை பெற முதன்மை நிர்வாக அலுவலர் / மீன்வள உதவி இயக்குனர், மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, எண்.11, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பொன்னேரி -- 601 204. (தொலைபேசி எண்.044 - -2797 2457) என்ற முகவரியில் அணுகலாம். இத்தகவலை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பெருந்தலைவர் மற்றும் ஆட்சியருமான வீரராகவ ராவ் தெரிவித்துள்ளார்.

**மழையால் உற்பத்தி குறைவு காய்கறி விலை கடும் உயர்வு**

திருச்சி: துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலைகளை தொடர்ந்து, தக்காளி உள்பட காய்கறிகளின் விலையும் உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் மாறுப்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாக, கடந்த ஆண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. நடப்பு ஆண்டும் அதே நிலைதான். இதனால், பருப்பு மற்றும் காய்கறிகளின் வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஏப்ரல், மே மாதங்களில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலைகள் குறைவாக இருக்கும். ஆனால், தற்போது துவரம் பருப்பு, 80 ரூபாயில் இருந்து, 120 ரூபாயாகவும், உளுந்தம் பருப்பு, 100 ரூபாய்க்கும் மேல் விலை உயர்ந்துள்ளது. மேலும், திருச்சி காந்தி மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைகளுக்கு கடந்த ஒரு வார காலமாக எதிர்பார்த்த அளவில் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால், தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்து வருகிறது.கடந்த, 10 நாட்களுக்கு முன், 10 ரூபாய்க்கு விற்ற கத்தரிக்காய், 30 ரூபாய்க்கும், 20 ரூபாய்க்கு விற்ற தக்காளி, 40 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கும் விற்ற

பீன்ஸ், 80 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. சாகுபடி குறைவு, சமீபத்தில் பெய்த மழையால் பூக்கள் உதிர்வு போன்ற காரணங்களால் தக்காளி, கத்தரிக்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், மார்கெட்டுக்கு வரத்தும் குறைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து, இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டு தக்காளி வரத்து அதிகரிக்க துவங்கும். அப்போது, விலை குறையக்கூடும், என வியாபாரிகள் தெரிவித்தனர்

**ஒரு லட்சம் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கமருந்து: டி.ஆர்.ஓ., அருணா தகவல்**

கரூர்: கரூர் மாவட்டத்தில், ஒரு லட்சம் விலையில்லாத ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கப்பட்டுள்ளது, என டி.ஆர்.ஓ., அருணா, தெரிவித்தார். கரூர் மாவட்டம், சோமூர் பஞ்சாயத்தில், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் விலையில்லா திட்ட ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது. முகாமை பார்வையிட்ட பின், டி.ஆர்.ஓ., அருணா தெரிவித்ததாவது:

தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில், கரூர் மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டில், 1,842 பயனாளிகளுக்கு, 7,368 ஆடுகள், 2012-13ம் ஆண்டில், 3,003 பயனாளிகளுக்கு, 12 ஆயிரத்து, 12 ஆடுகள், 2013-14ம் ஆண்டில், 2,391 பயனாளிகளுக்கு, 9,564 ஆடுகள், 2014-15ம் ஆண்டில், 2,437 பயனாளிகளுக்கு, 9,748 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆடுகளின் உற்பத்தி திறனை பெருக்கவும், எடையை அதிகரிக்கவும், கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலைய பகுதிகளில் குடற்புழு நீக்க முகாம் நடந்தது. இம்முகாம்களில், கரூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்ட, 38 ஆயிரத்து, 692 ஆடுகள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்பப்பட்ட, 67 ஆயிரத்து, 12 குட்டிகள் என

மொத்தம் ஒரு லட்சத்து, 5,704 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் ராமநாதன், துணை இயக்குனர் டாக்டர். பழனிவேல், உதவி இயக்குனர்கள் டாக்டர் மாதேஸ்வரன், குழந்தைசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கோடை உழவு செய்தால் மழைநீர் வீணாகாது : வேளாண் குறைதீர் கூட்டத்தில் அறிவுரை**

கரூர்: கோடை உழவு செய்தால் மழைநீர் வீணாகாமல், நிலத்தில் சேமிக்கலாம், என வேளாண்மை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. கரூர் கலெக்டர் அலுவலகத்தில், வேளாண் குறைத்தீர்க்கும் கூட்டம் நடந்தது. அதில், வேளாண்மை துறை சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை, 652.2 மி.மீ., இதில், கோடை பருவத்தில் சராசரி மழையான 109.5 மி.மீ.,க்கு, 226.3 பதிலாக மி.மீ., மழை கிடைத்துள்ளது. மழையை பயன்படுத்தி, விவசாயிகள் கோடை உழவு செய்யலாம். கோடை உழவு செய்வதால், மழைநீர் ஓடி வீணாகாமல் அந்த நிலத்திலேயே சேமிக்கப்படுகிறது. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. மண்ணுக்குள் இருக்கும் கூட்டு புழுக்கள் அழிக்கப்படுகின்றன. தென்மேற்கு பருவ மழை காலத்தில் பெய்யும் மழையை கொண்டு, மானாவாரி பயிர்களை சாகுபடி மேற்கொண்டு பயனடைலாம்.

கோடை உழவுப் பணிக்கு, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக, தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வேளாண் பொறியல் துறையில் உழவு இயந்திரம்

வாடகையாக மணிக்கு, 340 ரூபாய், மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு, 840 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாடகைத் தொகையை முன் கூட்டியே செலுத்தி, பெயரை பதிவு செய்யலாம். காரீப் பருவத்துக்கு தேவைப்படும் நெல் விதைகள், 170 மெட்ரிக் டன் சிறு தானிய பயிர் விதைகள், 2.5 மெட்ரிக் டன், பயறு வகை பயிர்களின் விதைகள், 27 மெட்ரிக் டன், எண்ணெய் வித்து விதைகள், 67 மெட்ரிக் டன் அளவுக்கு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி பயன் பெறலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

## மலைப்பகுதியில் ஆலங்கட்டி மழை

தாண்டிக்குடி : தாண்டிக்குடியில் நேற்று ஆலங்கட்டி மழை பெய்தது.கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வரு கிறது. நேற்று மதியம் 2.30 மணிக்கு துவங்கிய மழை 2 மணி நேரம் நீடித்தது. இடி மின்னலுடன் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது.

இதில் கால் மணி நேரம் ஆலங்கட்டிகள் விழுந்தன. கனமழையை அடுத்து மின்தடை ஏற்பட்டது. ஆறு, நீரோடை களில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயம், குடிநீர் தேவை மலைப் பகுதியில் பூர்த்தியாகியுள்ளது. இந்த மழை, மலை விவசாயங்களுக்கு வரவேற்பும், குறுவிவசாயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## நதிகளை இணைத்தால் விளைநிலங்கள் பரப்பு அதிகரிக்கும்; முன்னாள் நீதிபதி பேச்சு

தேனி : தேனியில் மழைநீர் சேகரிப்பு, நதிகள் இணைப்பு பற்றிய கருத்தரங்கு நடந்தது. ஏ.கே. எஜுகேஷனல் டிரஸ்ட் இயக்குனர்

அன்னக்கொடி முகாமை துவக்கி வைத்தார். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி மூர்த்தி பேசியதாவது: நதிநீர் இணைப்பு 1969 ல் நேரு காலத்தில் துவக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சி காலத்தில் நடைமுறைக்கு வந்தது. அகில இந்திய தேசிய நதிநீர் இணைப்பின் தலைவர் பதவி எனக்கு வழங்கப்பட்டது. நம்நாடு கிராமங்கள் நிறைந்தநாடு. விவசாயம் முக்கிய தொழில். நதிகளை இணைத்தால் நாடு செழிப்பாகும். நதிகள் இணைப்பால் 50 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும். ஒன்றரை லட்சம் ஹெக்டேர் விளை நிலங்களாக மாறும். நநிநீர் இணைப்பு மட்டும் இதற்கு போதாதது. கிராமங்களில் உள்ள குளம், கண்மாய்கள் தூர்வாரி மழைநீர் சேகரிக்க வேண்டும். இதனை நடைமுறைப்படுத்தினால் வெள்ளம், வறட்சி இல்லாத நாடாக மாறும். விழாவில் தேனி வக்கீல் சங்க தலைவர் சந்தானகிருஷ்ணன், ஓய்வு பெற்ற அதிகாரிகள் கோபால், அகமது, கருப்பையா, ஏ.கே. டிரஸ்ட் ஒருங்கிணைப்பாளர் தங்கபச்சையன், பத்ரகாளி எஜுகேஷனல் டிரஸ்ட் சுடலைமுத்து, சாமராயப்பட்டி சுரேஷ்குமார், வாழ்வாதார மாநில துணைத்தலைவர் முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் விற்பனை அதிகரிப்பு



பொள்ளாச்சி மார்க்கெட்டில் முகூர்த்த நாளையொட்டி வாழைத்தார் விற்பனை அதிகரித்து உள்ளது. வாழைத்தார் பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத் தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை, சேத்துமடை மற்றும் பல்வேறு கிராமப்புறங்களில் இருந்தும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு செவ்வாழை, மோரீஸ், பூவந்தார், கற்பூரவள்ளி, நேந்திர பழம், கதளி போன்ற அனைத்து வகையான வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகின்றன. விற்பனை அதிகரிப்பு

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நடை பெற்றது. ஏலத்துக்கு சுமார் 1300 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. ஏலத்தில் அதிகபட்சமாக பூவந்தார் ரூ.150 முதல் ரூ.350 வரையும், செவ்வாழை ரூ.300- ரூ.900, மோரீஸ் ரூ.150-ரூ.350,

கற்பூரவள்ளி ரூ.200 முதல் ரூ.450 வரையும், கதளி கிலோ ரூ.20-க்கும், நேந்திரம் கிலோ ரூ.32-க்கும் ஏலம் போனது.

இதுகுறித்து வாழைத்தார் வியாபாரி ஒருவர் கூறிய தாவது:-

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த வாரம் 1200 வாழைத்தார்கள் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டன. நேற்று 1300 வாழைத்தார்கள் வந்திருந்தன. முகூர்த்தநாள் என்பதால் வாழைத்தார் வரத்து அதிகரித்துடன், விற்பனையும் அதிகரித்து இருந்தது. அதிகபட்சமாக செவ்வாழை ரூ.900 வரை விற்பனை ஆனது.

இவ்வாறு அவர் கூறினார்.

**திருச்செங்கோட்டில் ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**



திருச்செங்கோட்டில் நேற்று 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு ஏலம் போனது.

மஞ்சள் ஏலம் : நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள்

ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து வியா பாரிகள் வந்து இருந்தனர்.

**ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு விற்பனை**

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 6 ஆயிரத்து 309 முதல் ரூ.8 ஆயிரத்து 299 வரையும், கிழங்கு ரகம் ரூ.5 ஆயிரத்து 555 முதல் ரூ.7 ஆயிரத்து 269 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 319 முதல் ரூ.18 ஆயிரத்து 499 வரையும் விற்பனை செய்யப்பட்டன. மொத்தம் 2 ஆயிரத்து 500 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் திருச்செங்கோடு அர்த்தனாரீஸ்வரர் வைகாசி விசாக தேர் திருவிழாவை யொட்டி அடுத்த வாரம் மட்டும் மஞ்சள் ஏலம் ரத்து செய்யப்படுவதாகவும் அதி காரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**1 கிலோ முருங்கைக்காய் ரூ.50–க்கு விற்பனை விளைச்சல் குறைந்ததால் விலை உயர்ந்தது**



கண்டமனூர் பகுதிகளில் முருங்கைக்காய் விளைச்சல் குறைந்து உள்ளதால் விலை உயர்ந்து, 1 கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

முருங்கை சாகுபடி

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள கண்டமனூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முருங்கை சாகுபடி நடந்து வருகிறது. இங்கு விளையும் முருங்கைக்காய்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. தனி சுவையுடன் இருக்கும் என்பதால் கண்டமனூர் பகுதி முருங்கைக்காய்க்கு தேவை அதிகம் இருக்கும். இந்த ஆண்டு முருங்கை மரத்தில் பூக்கள் அதிக அளவில் பூத்து இருந்தன. ஆனால் இந்த மாதத்தின் தொடக்கத்தில் பெய்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக மரத்தில் இருந்து பூக்கள் உதிர்ந்தன. இதனால் விளைச்சல் குறைந்தது.

1 கிலோ ரூ.50

காற்று, மழையில் தப்பிய பூக்கள் மூலம் உருவான பிஞ்சுகள் தற்போது முதிர்ச்சி அடைந்துள்ளதால் அவற்றை பறிக்கும் பணி நடந்து வருகிறது. குறைந்த அளவே விளைச்சல் அடைந்துள்ள நிலையில் இப்பகுதிகளில் இருந்து முருங்கைக்காய்களை வாங்கிச் செல்ல வியாபாரிகள் ஆர்வத்துடன் குவிந்து வருகின்றனர். விளைச்சல் குறைவு மற்றும் தேவை அதிகரிப்பு காரணமாக அவற்றின் விற்பனை விலை உயர்ந்துள்ளது. தற்போது 1 கிலோ முருங்கைக்காய் ரூ.50 வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விளைச்சல் குறைந்து உள்ளது கவலையை கொடுத்தாலும், விலை உயர்ந்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில், சில நாட்களில் அவற்றின் விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் சிலர் தெரிவித்தனர்.

**வெள்ளகோவில் வாரச்சந்தையில் 1 கிலோ முருங்கைக்காய் ரூ.60–க்கு விற்பனை**



வெள்ளகோவில்,

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவிலில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை கூடும் வாரச்சந்தைக்கு சுற்றுப்புற விவசாயிகள் தங்களின் தோட்டத்தில் விளைவித்த முருங்கைக்காய்களை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். நேற்று சந்தையில் 1 கிலோ செடி முருங்கைக்காய் ரூ.60–க்கும் மரமுருங்கைக்காய் 1 கிலோ ரூ.40–க்கும் விற்பனை ஆனது. கடந்த வாரமும் இதே விலைக்கு தான் விற்பனை ஆனது.

மழை பெய்ததால் முருங்கை மரத்தில் பூத்த பூக்கள் உதிர்ந்து விட்டதால் காய்கள் அதிகம் பிடிக்காததால் கடந்த 2 வாரங்களாக முருங்கைக்காய் வரத்து குறைந்தது. இதனால் 12 டன் வரை விற்பனைக்கு வரவேண்டிய முருங்கைக்காய்,5 டன் அளவே வந்தது. வரத்து குறைந்ததால் காய்களின் விற்பனை 1 கிலோ ரூ.60–க்கு விற்பனை ஆனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வரும் வாரங்களில் வரத்து அதிகமானால் முருங்கைக்காய்க்கு அதிக விலை கிடைக்காது என விவசாயிகள் தெரிவித்தனர்.

**பார்வையாளர்களை பரவசப்படுத்திய ஏலகிரி கோடைவிழா**



திருப்பத்தூர்

ஏலகிரி கோடைவிழாவில் தோட்டக்கலைத்துறைத்துறையினர் உள்பட அரசு துறையினர் அமைத்திருந்த பிரமாண்ட ஏற்பாடுகளை பார்த்து பார்வையாளர்கள் பரவசம் அடைந்தனர்.

<u>கோடைவிழா</u>

திருப்பத்தூர் தாலுகா ஜோலார்பேட்டை அருகே உள்ள ஏலகிரி வேலூர் மாவட்டத்தின் கோடைவாசஸ்தலமாக விளங்குகிறது. வேலூர் மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்கி அக்னியின் கோர பிடியில் இருந்தாலும் ஏலகிரி மலையில் ஆண்டு முழுவதும் ஜில்லென வீசும் தென்றல் காற்று பார்வையாளர்களுக்கு இதமாக இருப்பதால் எப்போதும் சுற்றுலா பயணிகள் இங்கு ஆர்வத்துடன் செல்கின்றனர்.

சுற்றுலா பயணிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஏலகிரியில் கோடைவிழா நடத்தப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான கோடைவிழா அக்னி நட்சத்திரம் விடைபெற்ற தினமான நேற்று தொடங்கியது.

இதனையொட்டி தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை சார்பில் பிரமாண்ட அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. அலுவலர்கள் போட்டி போட்டுக்கொண்டு வண்ண மலர்களாலும், காய்கனிகளாலும் விமானம், புலி, ஒட்டகச்சிவிங்கி உள்பட பல்வேறு விலங்குளின் உருவங்களை அழகிய வேலைப்பாடுகளுடன் ஆகியவற்றை அமைத்திருந்தனர். மேலும் விநாயகர் உருவம் பக்தி பரவசத்தையும், பயறு வகைகளால் இந்திய தேசிய கொடியின் நிறத்தில் இந்திய வரைபடம் போன்று உருவாக்கியது தேசிய உணர்வையும் ஏற்படுத்தியது.

திரண்டனர்

கோடைவிழாவை முன்னிட்டு திருப்பத்தூரிலிருந்தும், வேலூரிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. அந்த பஸ்களிலும், கார், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களிலும் சுற்றுலா பயணிகள் காலை முதலே செல்ல தொடங்கினர். அவர்கள் ஏலகிரிக்கு நுழைந்ததும் அவர்களை வரவேற்கும் விதமாக காய்கனிகளால் அலங்கார வளைவு அமைக்கப்பட்டு இருந்தது. மேலும் மேள கலைஞர்களும், நடன கலைஞர்களும் நடனமாடியபடி அனைவரையும் வரவேற்றனர். கோடைவிழாவை தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் கே.சண்முகநாதன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். இதில் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.சி.வீரமணி, கலெக்டர் நந்தகோபால் உள்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். கோடைவிழாவையொட்டி மலைவாழ் மக்களின் கிராமிய நடனமும் கண்ணை கவர்வதாக இருந்தது. நேற்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன. இன்று கோடைவிழா நிறைவு பெறுகிறது. சிறந்த அரங்குகளுக்கும், சிறப்பாக செயல்பட்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தினகரன்

**ஆடாதொடை செடியின் மருத்துவ குணம்**




ஆடாதொடை செடி நீண்ட, முழுமையான ஈட்டி வடிவ இலைகளையும், வெள்ளைநிற பூக்களுடன் 15 அடி வரை வளரக்கூடியது. இதனுடைய இலை மட்டுமே அரை அடி வரை நீண்டிருக்கும். இதன் இலை, பூ மற்றும் வேர்கள் மருத்துவ குணம் கொண்டவை. இவை தமிழில் வாதகி, நெடும்பர், அட்டகசம், ஆடா தொடை, ஆடு தொடா என்று கூறப்படுகிறது.ஆடாதொடை இலையின் சாறும் தேனும் சம அளவு எடுத்து கலந்து, சிறிது சர்க்கரையும் சேர்த்து தினமும் 4 வேளை குடித்து வந்தால், நுரையீரல் ரத்த வாந்தி, கோழை மிகுந்த மூச்சு திணறல், இருமல், ரத்தம் கலந்த கோழை போன்ற வியாதிகள் குணமாகும்.இவற்றை சிறு குழந்தைகளுக்கு 5 சொட்டும், 12 வயது வரையிலான குழந்தைகளுக்கு 10 சொட்டும், பெரியவர்களுக்கு 15 சொட்டும் என அளவாக கொடுத்தால் போதும். ஆடாதொடையின் இலைச்சாற்றை 2 தேக்கரண்டி எடுத்து, அவற்றுடன் 1 டம்ளர் எருமைப் பாலை கலந்து 2 வேளை குடித்து வந்தால் சீதபேதி, ரத்த பேதி

போன்றவை குணமாகும். இந்த இலையில் 10 எண்ணிக்கை எடுத்து, அரை லிட்டர் தண்ணீரில் போட்டு கால் லிட்டராக காய்ச்சி வடிகட்டி, தேன் கலந்து அவற்றை 2 வேளை தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வந்தால், எலும்புருக்கி காசநோய் (டி.பி), ரத்த காசம், சளி காய்ச்சல், சீதள வலி, விலா வலி ஆகியவை குணமடையும்.ஆடாதொடையின் வேருடன் கண்டங்கத்திரியின் வேரையும் சம அளவில் எடுத்து, இடித்து பொடியாக்கி, 1 கிராம் அளவு எடுத்து கொள்ள வேண்டும். அவற்றை தேனில் கலந்து 2 வேளை தொடர்ந்து உட்கொண்டால் நரம்பு இழுப்பு, சுவாச காசம், சன்னி, ஈளை, இருமல், சளி காய்ச்சல், எலும்புருக்கி, குடைச்சல் வலி ஆகியவை நீங்கும்.ஆடாதொடையின் இலையையும் புதினா இலைகளையும் 1 கைப்பிடி அளவு எடுத்து அரைத்து, 1 லிட்டர் தண்ணீரில் போட்டு, 200 மி,லி.யாக சுண்ட காய்ச்சி வடிகட்டி 2 வேளை குடிக்கலாம். அப்படி செய்தால் கரப்பான், குட்டம், கிரந்தி, மேகப்படை, ஊறல், விக்கல், வாந்தி, வயிற்றுவலி போன்றவை குணமாகும்.
உலர்ந்த ஆடாதொடை இலையை பொடி செய்து, ஊமத்தம் இலையில் சுருட்டி புகைபிடித்தால் மூச்சு திணறல் உடனே நிற்கும்.

ஆடாதொடை இலை, கோரைக் கிழங்கு, பற்பாடகம், விசுணுகரந்தி, துளசி, பேய்ப்புடல், கஞ்சாங்கோரை, சீந்தில் போன்றவற்றை ஒரு கைப்பிடி அளவு எடுத்து, அவற்றை 1 லிட்டர் தண்ணீரில் போட்டு, அரை லிட்டர் அளவாக சுண்ட காய்ச்சி வடிகட்டி, 4 வேளைக்கும் 50 மி.லி. அளவு குடித்தால், எல்லாவிதமான காய்ச்சலும் குணமாகும்.ஆடாதொடை வேரை 50 கிராம் எடுத்து, அரை லிட்டர் தண்ணீரில் போட்டு, 200 மி.லி.யாக காய்ச்சி வடிகட்டி குடித்தால், எல்லா விஷங்களும் முறிந்துவிடும். ஆடாதொடை இலையுடன் சிவனார்வேம்பு இலைகளை சம அளவாக எடுத்து அரைத்து, நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு, வெந்நீர்

குடித்து வந்தால், கட்டி போன்ற உள்ரணங்களும், நமைச்சல், சொறி, சிரங்கு, பூச்சிக்கடி உள்ளிட்ட விஷங்களும் குணமாகும்.

ஆடாதொடை இலையுடன் வேப்பமர இலை, அரிவாள்மணை பூண்டு இலை, சிறியாநங்கை இலை போன்றவற்றை சம அளவு எடுத்து அரைத்து, நீண்ட நாள் புண்கள் மீது பற்று போட்டு வந்தால், அவை ஆறி, புண்கள் இருந்த தழும்புகளும் மறைந்துவிடும்.இதனுடன் குப்பைமேனி இலையையும் சேர்த்து அரைத்து பற்று போட்டு வந்தால், இடுப்பில் பாவாடை நாடா மற்றும் அரைஞாண் கயிற்றினால் ஏற்பட்ட புண்கள் ஆறி, அவற்றின் கறுப்பு தழும்புகள் ஓடியே போய்விடும். ஆடாதொடை இலையை ஆவியில் வாட்டிய பின்னர், அதை சாறு பிழிந்து ஒரு டீ ஸ்பூனில் எடுத்து, அதனுடன் சிறிதளவு தேன் கலந்து குடித்து வந்தால், வறட்டு இருமலுடன் துப்பும் சளியில் ரத்தம் கலந்து வருவது உடனே நிற்கும். அத்துடன் 10 சொட்டு தூதுவளை இலையை சாறு பிழிந்து குடித்தால், சவ்வு போன்று இழுக்கும் இருமல் நீங்கும்.

ஆரைக் கீரையின்மகத்துவம் ஆரைக் கீரை என்பது, செங்குத்தாக வளரும் தண்டில் 4 கால்வட்ட இலைகளை கொண்ட மிகவும் சிறிய நீர் தாவர கீரை. தமிழகமெங்கும் உள்ள நீர்நிலைகள் மற்றும் வாய்க்கால் வரப்புகளில் தானே வளரும் குணமுடைய இந்த ஆரைக் கீரை மருத்துவ குணம் கொண்டது. நம் உடலில் சேரும் வெப்பத்தை நீக்கி, தாகம் தணிக்கும் குணம் கொண்டது. இவற்றை ஆராக் கீரை, ஆலாக்கீரை, நீருளாரை என்றும் அழைக்கிறார்கள். இந்த கீரை செவ்வாரை, புளியாரை, வல்லாரை, வறலாரை என்ற வகைகளாகவும் உள்ளது.இந்த ஆரைக் கீரையை நிழலில் காயவைத்து இடித்து பொடியாக்கி, 30 கிராம் பொடியை அரை லிட்டர் தண்ணீரில் போட்டு பாதியாகக் காய்ச்சி வடிகட்டி, பாலும் பனங்கற்கண்டும் கலந்து, தொடர்ந்து 2 வேளை குடித்து வந்தால், அதிக தாகம் போக்கும். சிறுநீரில் ரத்தம் கலந்து வருவதை தடுக்கும்.

**நீரிழிவு நோயாளிகளின் தகுந்த உணவு**




நீரிழிவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியுமே தவிர முழுவதுமாகக் குணப்படுத்த இயலாது. இதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் சிறுநீரகம், கண், இரத்தக் குழாய் போன்ற உறுப்புகளின் பாதிப்பைத் தவிர்க்க முடியும். இதற்கு உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, மருந்துகள் ஆகியவை உதவுகின்றன. உணவுக் கட்டுப்பாடு நீரிழிவு சிகிச்சை முறையில் முதலிடம் வகிக்கின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் அரிசி உணவைத் தவிர்த்து கோதுமை, கேழ்வரகு போன்ற உணவு வகைகள் மட்டுமே உண்ண வேண்டும் என்று தேவையில்லை எந்த வகையான தானியம் உட்கொள்கிறோம் என்பதை விட எந்த அளவிற்கு உட்கொள்கிறோம் என்பதே முக்கியமாகும். குறிப்பிட்ட உணவு வகைகள் குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட நேரத்தில் உட்கொள்ள வேண்டும்.உணவு உண்ணாமலிருப்பது, அளவிற்கு மேல் உண்பது இரண்டுமே கூடாது.

**தவிர்க்க வேண்டிய உணவு வகைகள்:-**

இனிப்புகள், தேன், வெல்லம், சர்க்கரை கலந்த பலகாரங்கள். கேக், பிஸ்கெட், ஐஸ்கிரீம். வெண்ணெய், நெய், பொரித்த உணவு வகைகள். மதுபானங்கள், குளிர் பா னங்கள், ஹார்லிக்ஸ், போர்ன் விட்டா. உலர்ந்த

பழவகைகள், கொட்டைப் பருப்பு (முந்திரி, பாதாம், பிஸ்தா).

எண்ணெயில் தயாரித்த ஊறுகாய், வாழைப்பழம், அசைவ உணவுகளில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ளதை தினமும் சாப்பிட்டால் எடை குறையாது. இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவும் குறையாது. எனவே தான்வாரம் ஒரு முறைக்கு மேல் அசைவ உணவு சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

**தாராளமாக சாப்பிடக்கூடியவை:-**

கீரை வகைகள், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், கத்தரிக்காய், புடலங்காய், பீன்ஸ், கொத்தவரங்காய், குடைமிளகாய், பப்பாளிப்பழம், வாழைப்பூ, வாழைத்தண்டு, தக்காளி, சௌசௌ, அவரைக்காய், முட்டைக்கோஸ், வெங்காயம், பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி இலை, கறிவேப்பிலை, புதினா, காய்கறி சூப், எலுமிச்சை.

**சாப்பிடக்கூடிய பழவகைகளின் அளவு:-**

சாத்துக்குடி - 1,

ஆரஞ்சு - 1,

கொய்யா - 1,

ஆப்பிள் - அரை,

திராட்சை - 15,

பிளம்ஸ்- அரை,

தர்ப்பூசணி - 1

பெரிய துண்டு, மாதுளை- அரை,

பலா- 3 சுளைகள்,

அன்னாசி- 2 சிறிய துண்டுகள்,

பப்பாளி- 1 பெரிய துண்டு.

**சாப்பிடும் நேரம்:-**

காலை 6 மணி:- காபி அல்லது தேநீர் 1 கப், சர்க்கரை இல்லா மல்.
காலை 8 மணி:- இட்லி- 4, அல்லது தோசை- 4 அல்லது சப்பாத்தி- 4 அல்லது இடியாப்பம் - 4, உடன் சட்னி அரை கப் அல்லது ரொட்டி 4 துண்டுகள்.
முற்பகல் 11 மணி:- மோர் அல்லது தக்காளி அல்லது பருப்பு அல்லது காய்கறி சூப் அல்லது 1 டம்ளர் எலுமிச்சை சாறுடன் வெள்ளரிக்காய் - 1 கப்.
பகல் 1 மணி:- சோறு-2 கப், சாம்பார் 1/4 கப், கீரை-1 கப், காய்கறி-1/2 கப், ரசம்-1 கப், கோழி-75 கிராம் அல்லது கறி- 50 கிராம் அல்லது மீன்-75 கிராம் அல் லது முட்டை வெள்ளைக் கரு அல்லது சுண்டல் 1/4 கப்.
மாலை 5 மணி:- காபி அல்லது தேநீர்-1 கப் (சர்க்கரை இல்லாதது), வடை- 1 அல்லது மாரி பிஸ்கட்- 2.
இரவு 8 மணி:- காலை அல்லது பகல் சாப்பாட்டைப் போல் பாதி அளவு.
இரவு 10 மணி:- பால் அரைகப், பழம் சிறியது-1.

உளுந்து சாகுபடியில் பாதுகாப்பு முறை கடைபிடிப்பு விவசாயிகளிடம் வேளாண்துறை வலியுறுத்தல்

பழநி, : ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடித்தால் உளுந்து சாகுபடியில் எதிர்பார்க்கும் மகசூலை நிறைவாக பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர்
அறிவுறுத்தியுள்ளனர்.வடிகால் வசதியுள்ள நிலங்களில் உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் என்பதால் விவசாயிகள் பலர் இதை பயிரிடுவதில் ஆர்வம் செலுத்துகின்றனர். நடவின்போது கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பம் குறித்து பழநி வேளாண்மை துறையினர் கூறியிருப்பதாவது:செப்டம்பர், அக்டோபர் காலங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ரகங்களை பயிரிடலாம். ஜனவரி, பிப்ரவரியில் டி.எம்.வி.1 ரகமும் பிப்ரவரி, மார்ச்சில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை சாகுபடி செய்யலாம். எக்டேருக்கு 20 கிலோ

விதை தேவைப்படும். இவற்றை துத்தநாக சல்பேட் கரைசலில் 3 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

அதன்பின்னர் நிழலில் உலர வைத்து ஒருமாதம் வரை இருப்பு வைத்து பயிரிடலாம். விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் உயிர் உரத்தை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். மண் பரிசோதனை முறைப்படி செய்திருந்தால் அதன் தன்மைக்கேற்ப உளுந்து உட்பட அனைத்து பயிர்களையும் பயிரிட்டு தேவையான மகசூலை பெறலாம்.

அவ்வப்போது தழைச்சத்து, மணிச்சத்து உரங்களை இட வேண்டும். விதைக்கும் முன் கடைசி உழவில்  நுண்ணுரம் இட வேண்டும்.

உளுந்துக்கு 4 முறை நீர் பாய்ச்சினால் தேவையான மகசூலை எளிதாக பெறலாம். பூ மற்றும் காய் காய்க்கும் பருவங்களில் வறட்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நிலம் ஈரப்பதமாக உள்ளதா என நாள்தோறும் கவனிக்க வேண்டும். இதுபோன்ற தொழில் நுட்பங்களை முறையாக கடைபிடித்தால் எளிதாக விவசாயிகள் எதிர்பார்க்கும் லாபத்தினை பெறலாம் என வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர்.

**முன்னோர் வழங்கிய மூலிகை : தூதுவளை**




தூதுவளை இந்தியாவில் அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப

மூலிகைகளில்இதுவும் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. இந்தியா முழுவதும்தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும்.சிறு சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டது. தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும்.

தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மை சக்தியையும் அதிகரிக்கும். தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும்,பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளை கீரையை பருப்புடன் சேர்த்துசமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களை குணப்படுத்த மிளகு கற்பம் 48 நாட்கள்சாப்பிட்டபின், தூதுவளைக் கீரை சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத,பித்த நோய் தீரும்.

தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு காலை, மாலை எனஇருவேளையும் தேனில் கலந்து கற்ப முறையாக பத்தியம் கொண்டு ஒரு மண்டலம்சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்குநோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும். தாதுவைபலப்படுத்தும். தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாகி ஆண்மையைக் கூட்டும். காது மந்தம், இருமல், நமைச்சல் பெருவயிறு மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்தாகும். மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல், சூலை நீர், போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்து. தூதுவளை காயை சமைத்தோ, அல்லது

வற்றல், ஊறுகாய் செய்து ஒருமண்டலம் கற்பமுறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய்நீங்கும்.
தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தால் ஆண்மையைப் பெருக்கி உடலுக்கு வலு கொடுக்கும்.
தூதுவளை பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தேன் கலந்து சாப்பிட்டால்மார்புச்சளி, இருமல், முக்குற்றங்கள் நீங்கும். பாம்பின் விஷத்தைமுறிக்கும். நாளுக்கு இருமுறை மலத்தை வெளி யேற்றும்.தூதுவளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பதுநாட்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல் கண் நோய்கள் நீங்கும்.தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது.
தூதுவளை இந்தியாவில் அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப மூலிகைகளில்இதுவும் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. இந்தியா முழுவதும்தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும்.சிறு சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டது. தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும்.
தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மை சக்தியையும் அதிகரிக்கும். தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும்,பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளை கீரையை பருப்புடன் சேர்த்துசமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களை குணப்படுத்த மிளகு கற்பம் 48 நாட்கள்சாப்பிட்டபின், தூதுவளைக் கீரை சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத,பித்த நோய் தீரும்.

தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு காலை, மாலை எனஇருவேளையும் தேனில் கலந்து கற்ப முறையாக பத்தியம் கொண்டு ஒரு மண்டலம்சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்குநோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும். தாதுவைபலப்படுத்தும். தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாகி ஆண்மையைக் கூட்டும். காது மந்தம், இருமல், நமைச்சல் பெருவயிறு மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்தாகும். மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல், சூலை நீர், போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்து. தூதுவளை காயை சமைத்தோ, அல்லது வற்றல், ஊறுகாய் செய்து ஒருமண்டலம் கற்பமுறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய்நீங்கும். தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தால் ஆண்மையைப் பெருக்கி உடலுக்கு வலு கொடுக்கும். தூதுவளை பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தேன் கலந்து சாப்பிட்டால்மார்புச்சளி, இருமல், முக்குற்றங்கள் நீங்கும். பாம்பின் விஷத்தைமுறிக்கும். நாளுக்கு இருமுறை மலத்தை வெளி யேற்றும்.தூதுவளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பதுநாட்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல் கண் நோய்கள் நீங்கும்.தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது.

தூதுவளை இந்தியாவில் அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப மூலிகைகளில்இதுவும் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. இந்தியா முழுவதும்தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும்.சிறு சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டது. தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து

அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும்.

தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மை சக்தியையும் அதிகரிக்கும். தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும்,பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளை கீரையை பருப்புடன் சேர்த்துசமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களை குணப்படுத்த மிளகு கற்பம் 48 நாட்கள்சாப்பிட்டபின், தூதுவளைக் கீரை சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத,பித்த நோய் தீரும்.

தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு காலை, மாலை எனஇருவேளையும் தேனில் கலந்து கற்ப முறையாக பத்தியம் கொண்டு ஒரு மண்டலம்சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்குநோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும். தாதுவைபலப்படுத்தும். தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாகி ஆண்மையைக் கூட்டும். காது மந்தம், இருமல், நமைச்சல் பெருவயிறு மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்தாகும். மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல், சூலை நீர், போன்றவற்றிற்கு தூதுவளை கீரை சிறந்த மருந்து. தூதுவளை காயை சமைத்தோ, அல்லது வற்றல், ஊறுகாய் செய்து ஒருமண்டலம் கற்பமுறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய்நீங்கும்.

தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தால் ஆண்மையைப் பெருக்கி உடலுக்கு வலு கொடுக்கும்.

தூதுவளை பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தேன் கலந்து சாப்பிட்டால்மார்புச்சளி, இருமல், முக்குற்றங்கள் நீங்கும். பாம்பின்

விஷத்தைமுறிக்கும். நாளுக்கு இருமுறை மலத்தை வெளி யேற்றும்.தூதுவளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பதுநாட்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல் கண் நோய்கள் நீங்கும்.தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது.